RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s218

# மாணிக்கவாசகரின் சிவநெறிக்கொள்கை

ஜ. ரெஜினாபேகம் [அ, *], சே. செந்தமிழ்ப்பாவை [அ]

[அ] தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# Manikkavasagar's the Theological Policy of Shiva

**J. Regina Begum** [a,*], **S. Senthamizh Pavai** [a,]

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, Tamil Nadu, India.

* Corresponding Author: skbatcha2000@gmail.com

Received: 04-01-2021
Revised: 19-04-2021
Accepted: 13-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

It is considered to be the best of the times in Tamil Nadu. Four people are considered to be the cause of this headache. According to the article, the biographer, who is regarded as the fourth person in the period of time as a vegetarian, describes his life history, his devotion to Lord Shiva, and the quality of his songs on the Lord. Thevara Teacher However, he is a time-honored triumvirate. In his songs, he recorded the worship of the Lord, the first and endless lord of the Naga, mixed with a deluge of lord Shiva is changing the principle.

**Keywords:** Shiva, Manikkavasagar, Four People, Thevaram

## முன்னுரை

தமிழகச் சமயங்களுள் தலைசிறந்ததாகக் கருதப்படுவது சைவசமயம். இச்சமயம் தலைத்தோங்கக் காரணமாகக் கருதப்படுவர் நால்வர் என்பர். சைவக்குரவர் எனப் போற்றப் பெறும் அந்நால்வருள் காலமுறைப்படி நான்காவதாக வைத்து எண்ணப்பெறுபவர் திருவாதவூரடிகள் என்று போற்றப்படும் மாணிக்கவாசகர் அவரது வாழ்க்கை வரலாற்றையும், சிவபெருமான் மீது அவர் கொண்ட பக்தி உணர்வையும், அப்பக்தி உணர்வால் இறைவன் மீது அவர் பாடிய பாடல்களின் சிறப்பையும் விளக்கி உரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சைவசமயம்

உலகில் தோன்றிய சமயங்கள் யாவும் அன்பை நிலைநிறுத்தி, அறத்தை வலியுறுத்தி, ஒற்றுமையைப் பலப்படுத்தவே ஏற்பட்டன என்று அறிஞர் பலரும் கருதுவர். அவற்றுள் எவராலும் தோற்றுவிக்கப்படாத தொன்மை வாய்ந்ததாக இந்து சமயம் மதிக்கப்படுகிறது. அத்தகைய இந்து சமயத்தின் விழிபோல விளங்குவது சைவ சமயம் ஆகும்.

சைவ சமயம் அறிவுப் பூர்வமானதுÉ அறிவியல் பூர்வமானது. காரண காரியங்களைக் கொண்ட தருக்க நெறிக்கு உகந்தது. உலகெங்கும் பரவியது. நிலைத்த ஒன்றுÉ அனுபவத்திற்கு உகந்தது. முற்போக்குத் தன்மை கொண்டது. சுதந்திரமானது என்னும் அதன் சாராம்சத்தை நன்கு அறிந்த அறிஞர் பெருமக்கள் தம் கூற்றை,

"சைவ சமயம் சிந்துவெளி நாகரிகத்துக்கும் (கி.மு.4000)க்கு முற்பட்ட பழமையுடையது. அஃது இன்னும் எவ்வளவ பழமை உடையதென்பதை வரையறுக்கக் கூடவில்லை. அச்சமயம் உலகத்திலேயே மிக்க பழமை வாய்ந்தது. இன்றளவும் இருந்து வரும் சமயம் என்பதை மறுத்தல் ஆகாது" 1 என்னும் கருத்தும் நன்கு விளக்கும்.

மேலும் "சிந்து வெளிமக்கள்லிங்க வணக்கத்தினர் என்பதை, அங்குக் கிடைத்த பலலிங்கங்களைக் கொண்டு அழுத்தமாகக் கூறலாம். அங்கு இடது காலைத் தூக்கி ஆடும் நடராசர் உருவம் கிடைத்துள்ளது."

என்னும் செய்தியால் முற்காலத்திலேயே சிந்துசமவெளி மக்கள் சிவனை வழிபட்ட தன்மையினை அறிய முடிகிறது. இவற்றின் மூலம் சைவ சமயத்தின் தொன்மையையும், பிறவாயாக்கைப் பெரியோனாகக் கருதப்படும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமயமே சைவ சமயம் என்பதையும் அறியலாம்.

## சைவத்தின் சிறப்பு

சிவனை இடையறாது எண்ணி எண்ணி உள்ளம் உருகும் செந்நெறியே சைவ சமயம் எனவும், சிவனை வழிபடும் முகத்தான் இச்சமயம் 'சைவம்' எனப் பெயர் பெற்றது எனவும் வழிபடுவோர் 'சைவர்' எனவும்; கருதப்படுகின்றனர். சிவம் என்ற சொல்லுக்கு "நன்மை, வீடுபேறு, மங்கலம், செம்மை" 3 எனப் பல பொருள்களைத் தருகிறது கழகத் தமிழ் அகராதி.

## மாணிக்கவாசகரின் சிவநெறிக் கொள்கை

மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்கள் மூவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர். அவர் வாழ்ந்த காலம் கி.பி.792 முதல் 835 வரை ஆட்சி புரிந்த முதல் வரகுண பாண்டியனது ஆட்சிகாலம் ஆகும்.

சைவசமயக் குரவர் எனப் போற்றப் பெறும் நால்வருள் கால முறைப்படி நான்காவதாக வைத்துப் போற்றப் பெறுபவர் மாணிக்கவாசகர். தேவார மூவருக்கும் காலத்தால் முற்பட்ட திருமூலநாயனார் மேற்கொண்டொழுகிய சைவ சித்தாந்தம் எனப்படும் சிவநெறிக் கொள்கையினையும் மேற்கொண்டவராக மாணிக்கவாசகரை அறிய முடிகிறது. அதனைத் திருமந்திரம் மற்றும் தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள தொடர்களும் கருத்துகளும் திருவாசகத்தில் எடுத்தாளப் பட்டிருப்பதிலிருந்து அறியலாம். திருமூலர் கூறும் பதி, பசு, பாசம், எனும் முப்பொருள் உண்மையும், உயிர்களைப் பற்றியிருக்கும் மும்மலங்கள் குறித்து தமது பாடல்களில் அவர் எடுத்தாண்டிருப்பதும் அதனை நிறுவுகின்றன.

## மாணிக்கவாசகரின் சைவசித்தாந்தக் கொள்கை

மாணிக்கவாசகர், தம் நூலில் சைவசித்தாந்த நுண்பொருள்கள் குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளார். உயிர்களின் அறிவை மறைத்து நிற்கும் மலமும், அவ்வுயிர்களின் கட்புலனை மறைத்து நிற்கும் இருளும் ஆணவமலத்தின் இருவேறு தன்மைகளாகச் சுட்டப்படுகின்றன. ஆணவம் அறியாமையைச் செய்தலின் அஞ்ஞானம் எனவும், உயிர்களின் அறிவுச்செயல் வெளிப்பட இயலாதவாறு பிணித்து நிற்பதால் பாசம் எனவும், உயிர்களுக்குக் கலக்கத்தை விளைவிப்பதால் மலம் எனவும், அம்மலத்தினால் உயிர்களிடத்து நிகழும் வினைகள் கொடிய தன்மையுடையனவாய் இருப்பதால் கடியவினை எனவும், தம் படைப்பில் அறிவுறுத்தியுள்ளார். மேலும், தொன்றுதொட்டு உயிர்களைப் பற்றி வருத்தும் பழைமையுடையதால் அதனைப் 'பழமலம்' என்றும், உயிர்கள் அடையும் எல்லாத் துன்பங்கட்கும் காரணமாவதால் 'பாசவேர்' என்றும், ஆணவமலத்தின் இயல்பினை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆணவமலத்தை, "வல்வினையேன் தன்னை, மறைந்திட மூடியமாய இருளை" என்பதன் வாயிலாக இறைவனை உணராதவராறு தடைசெய்யும் இருளாக

ஒப்புமைப்படுத்துகிறார். அந்த இருளாகிய அஞ்ஞானத்திலிருந்து தம்மைமீட்டுக் கொண்டு வரும் நல்லறிவாக இறைவன் உள்ளார; என்பதை,

"அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"

"பாசத் தளையறுத்து ஆண்டு கொண்டோன்"

"கடிய வினையகற்றிப் பழமலம் பற்றறுத்தாண்டவன்"

"பாசவேர் அறுக்கும் பழம்பொருள்"

என்பவற்றின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். தம் மும்முலங்களை வீழ்த்தி, கடைத்தேற அருள் செய்தவராக இறைவனைக் குறிப்பட்டுள்ளது அறியத்தக்கது. மேலும் மாணிக்கவாசகர; தனக்கு இறைவன் தாயாகவும், தந்தையாகவும், தலைவனாகவும் விளங்குகிறான். ஆனால் அவனுக்குத்தாயோ, தந்தையோ இல்லாது யாருமற்ற அனாதை போல விளங்குகின்றான் என்று இறைவனுக்காக வருந்துகின்ற நிலையினை அறிய முடிகிறது.

மேலும் சூரியனுடைய ஒளியானது சூரியனை விட்டு மற்ற உருவங்களின் மீதுபட்டு பிரதிபலிப்பது போன்று ஆன்மாவும் அருளையுடைய சிவத்தோடு கூடி. சிவமாய் நிற்கும் என்ற சித்தாந்தக் கொள்கையை.

"அவமாய தேவர் அவகதியி லழுந்தாமே

பவமாயறு காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி

நவமாய செஞ்சுடர் நலுகுதலும் நாமொழிந்து

சிவமானவா பாடித்தெள;ளேனங் கொட்டாமோ"

என்பதன் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் உயிர்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலையில் இதற்கு முன் அதன் கண் நிகழ்ந்த புறப்பொருளுணர்வும், தன்னைப் பற்றியவுணர்வும் முற்றிலும் மறைந்து ஒழிய இறைவனது மெய்யுணர்வு மட்டுமே மேம்பட்டு விளங்கும் என்றும், தன்னுணர்வு அதனுள் அடங்கி விடுகிறது என்றும் கூறக்காணலாம். மேலும் சிவானந்தமாகிய பேரின்ப வெள்ளத்தில் படிந்து இன்பம் அடையும் நிலையில், உயிரானது தன் பொருள் தன்மையில் சிறிதும் கெடாதிருக்கும் என்ற தத்துவத்தை.

"முத்திதனின் மூன்றுமுதலும் மொழியக்கேள்

சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு மெத்தவே

இன்பங் கொடுத்தல் இறைஇத்தைல் மலம் விளைவித்தமலம்

அன்புடனே கண்டுகொள் அப்பா" 10.

என்று உண்மை விளக்கமும்,

"தானும் அழிந்து தனமும் அழிந்துநீ

டூனும் அழிந்து உயிரம் அழிந்துடன்

வானும் அழிந்து மனமும் அழிந்தபின்ன

நானும் அழிந்தமை நானறியேனே"

என்று திருமூலரும் கூறுவதைப் போன்று,

"வான்கெட்டு மாருதமாய்ந்தழல்நீர் மண்கெடினும்

தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு

ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டேன் உள்ளமும்போய்

நான்கெட்ட வாபாடித் தௌ;ளேனங் கொட்டாமோ”

என்று குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர்.

உடையவன், வெய்யாய் - வெப்பமுடையவன். ஐயன் - தலைவன், மறையோன் -வேதத்தை அருளிச் செய்தவன். விமலன் - ஆன்மாவாய் நிற்பவன் என்னும் பெயர்கள் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும்தன் உணர்வுகளை இறைவனிடம் வெளிப்படுத்தும் சூழல்களில்; எம்பிரான், தானேயாகிய தயாபரன். நின்மலன், அழல் உருவன். அந்தம் இலான் என்றெல்லாம் போற்றக் காணலாம். தன்னையும் இறைவனையும் சுட்டும்போது,

“தான் அந்தம் இல்லான்தனை அடைந்த நாயேனை

ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான்” என்கிறார். (மேலது- ப.5: பா.10).

சிவபெருமானின் பெயர்களைச் சுட்டும் அனைத்துப் பாடல்களிலும் தன்னை மிகக் கீழானவனாகக் காட்டியிருப்பது அவரது பக்தி நெறிக்குச் சான்றாகிறது. மேலும் இறைவனைப் போற்றிப் பாடும்போது பொருள் பொதிந்த பல்வேறு பெயர்களைச் சுட்டி தன் பக்தி உணர்வை வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

## முடிவுரை

மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்; மூவருக்கும் காலத்தால் பிற்பட்டவர் எனினும் தம் காலத்துக்கு முந்தைய திருமூலரின் திருநெறியைப் போற்றியதோடு அவர்தம் சித்தாந்தக் கொள்கையைத் தாமும் ஏற்றுப் போற்றியுள்ளார். முதலும் முடிவுமற்ற இறைவன் நாயைப் போன்ற இழிபிறவியாகிய தன்னை ஆனந்த வெள்ளமாகிய சிவப்பெரு வெள்ளத்தில் கலக்கச் செய்தான் அவனருளால் அவன்தாள் வணங்கியதையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். அன்பே சிவம் என்பதே மாணிக்கவாசகரின் இறைநெறிக் கொள்கையாக விளங்குகிறது.

## References

Kazhaga Tamil Dictionary, (1991), Kazha Veliyedu, South India Saiva Siddhanta Works Publishing Society, 19th Edition, Chennai, India

Rajamanikanar, M., (2018), Mohenjo Daro and Indus Valley Civilization, Naam Tamilar pathippagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License